சார்பு நீதிமன்றம், மேலூர்
OS No. 9/2025

பெயர் : ரஹமத் நிஷாபேகம்
தகப்பனார் பெயர் :
கணவர் பெயர் :சேக்தாவூத்
வயது :51
கிராமம் :கருங்காலக்குடி
வட்டம் :மேலூர்
தொழில் :வீட்டுக்குடித்தனம்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

20.04.2026

வா.சா.1 முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். 29.08.2007தேதியிட்ட என் பெயரில் உள்ள கிரைய ஆவணம் அசல் வா.சா.ஆ.1. 29.08.2011 தேதியிட்ட என் சகோதரி இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி ரசியாபேகம் அவரது கணவரான 2ம் பிரதிவாதி நாசருக்கு எழுதி கொடுத்துள்ள மோசடியான தான செட்டில்மெண்ட் ஆவணம் கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.2. 27.10.2015 அன்று 2ம் பிரதிவாதி நாசர் சிட்டியூனியன் வங்கி, நத்தம் கிளைக்கு எழுதி கொடுத்துள்ள அடமான பத்திரத்தின் கணினிபதிவிறக்க நகல் வா.சா.ஆ.3. மதுரை வடக்கு மாவட்ட பதிவாளர் அவர்களின் செயல்முறை ஆணை வா.சா.ஆ.4. ரிட் மனு எண்.24717/2024 வழக்கின் உத்தரவு நகல் வா.சா.ஆ.5. வருவாய் கோட்டாட்சியர் மேலூர் அவர்களின் 14.08.2024 தேதிய செயல்முறை ஆணைகள் வா.சா.ஆ.6. அரசு வழிகாட்டுதல் மதிப்பீடு வா.சா.ஆ.7.

வழக்கு சொத்தின் வரிரசீதுகள் 2 எண்ணம் வா.சா.ஆ.8. என் பெயரில் உள்ள வழக்கு சொத்திற்கான பட்டா எண்.4889 மற்றும் 4898கணினி பதிவிறக்க நகல் 2 எண்ணம் வா.சா.ஆ.9 வரிசை.

(குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.04.20 20:47:46 +0530

Sub Judge
Melur